சீனக் கலாசாரத்தில் கல்விமான்
கல்வி கற்றோர், அதிகாரிகள், வணிகர்கள்

பல நூற்றாண்டுகளாக சீனக் கலாசாரத்தில் கல்விமான் எனப்படுவது மிக உயர்வாகப் பார்க்கப்பட்டது. பாரம்பரிய சுவடிகளைப் படிக்கத் தெரிந்தோர், எழுத, ஓவியம் வரைய, இசை வாசிக்க, கல்வி கற்க முடிந்தோர் ஆகியோருக்கு பெரிய மரியாதை வழங்கப்பட்டது. அரசாங்க ஊழியர், வெற்றிகரமான வணிகர், வெளிநாட்டுச் சீனர் என யாராக இருந்தாலும் கல்விகற்ற தனி நபர்கள் சீனக் கலாசாரத்தில் முக்கியப் பங்கு வகித்தனர்.

கன்ஃபியூஷியசின் கொள்கைகளும் சமூக குருமரபும்

கல்விமானைச் சித்திரிக்கும் எழுத்துக்கள் கன்ஃபியூஷியசுக்குச் (551-479 BC) சொந்தமானவை. அவர் காலத்தில் இருந்த அரசியல் கொந்தளிப்பு, போர் ஆகியவற்றுக்குப் பதில் கூறும் வகையில் சமூகத்தை நிலைப்படுத்த ஒரு சமூகக் கோட்பாட்டை உருவாக்கினார் கன்ஃபியூஷியஸ். டாங் சாம்ராஜ்யத்தின் (618-907) தொடக்கத்தில், தேர்வுமுறை மூலம் சமூகத்தில் முன்னேற முடிந்தது. அந்த தேர்வில் கன்ஃபியூஷியஸ் படைப்புகள் குறித்த அறிவைச் சோதிக்கும் கேள்விகள் கேட்கப்பட்டன. மேண்டரின்ஸ் என்றழைக்கப்பட்ட கல்விமான்-அதிகாரிகள் சமூக அமைப்பில் ஆகமேல் மட்டத்தில் வைக்கப்பட்டனர். எனினும் கல்விமான் என்பதன் பொருள் காலப்போக்கில் மாறி, மிங் சாம்ராஜ்யத்தின் (17ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதி) கடைசிக் கட்டத்தில் செல்வந்த வணிகர்களுடன் கலந்துபோனது.

உண்மை அல்லது விருப்பம்

உண்மையான கல்விமான்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் இலக்கியத் திறனையும் உள் ஒழுக்கத்தையும் மேம்படுத்திக்கொள்ள அர்ப்பணித்துக் கொண்டனர். நிறைய பேர் கல்விமான்களாக வர விருப்பப்பட்டு இந்த கொள்கைகளை பின்பற்றினர். சமூகத்தை ஒட்டுமொத்தமாக முன்னேற்றுவதற்கு கல்விமான்கள் நன்னெறிகளுடன் நடந்து கொள்ள ஊக்குவிக்கப்பட்டனர்.

சிங்கப்பூரில் கல்விமான்கள்
17ஆம் 19ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் திரவியம் தேட பல சீனர்கள் தென்கிழக்காசியாவிற்கு வந்தனர். வெற்றிகரமான வணிகர்கள் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்தத் தொடங்கினர். அதனால் அவர்களுக்கும் வணிகர்களுக்கும் இருந்த பாரம்பரிய சமூக இடைவெளி குறையத் தொடங்கியது. சிங்கப்பூரின் ஆரம்பகால தியோச்சியூ சமூகத்தின் தலைவர் சியா இயூ ஜின், தன் வாழ்நாளின் பிற்பகுதியில் ஓவியம் வரைவது, கையெழுத்துக் கலை ஆகியவற்றைக் கற்றுக் கொண்டார். ஆங்கிலம் கற்ற பரானாக்கான் இனத்தவரான லிம் பூன் கெங், கன்ஃபியூஷியஸ் விழிப்பு இயக்கத்தின் தலைவராக ஆனதோடு, சீனாவில் ஆமோய் பல்கலைக் கழகத்தின் தலைவருமானார். பணக்கார வெளிநாட்டுச் சீனர்கள் பணம் கொடுத்து பட்டங்களை வாங்கி, மேண்டரின்களின் சீருடைகளையும் முத்திரைகளையும் அணிந்து கொண்டனர். அந்தச் சின்னங்களை அணிந்துகொள்ளத் தகுதி பெறாதோரும் அவற்றை அணிந்தனர்.

## நிலையான சமூகத்தின் அடித்தளம் கன்ஃபியூஷியனிசம்

சோவ் சாம்ராஜ்யத்தின் இறுதிக் கட்டத்தில் உள்நாட்டுப் போரும் அரசியல் ஊழலும் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர் கன்ஃபியூஷியஸ். சமூகத்தை ஒருநிலைப்படுத்த அவர் சடங்குகளும் இசையும் கலந்த முறையைப் பரிந்துரைத்தார். பெற்றோர், உடன்பிறப்புக்கள், வாழ்க்கைத் துணைவர்கள், நண்பர்கள், ஆட்சியாளர்கள் ஆகியோருக்கான பரோபகாரத்தின் அடிப்படையில் ஐந்து மனித உறவுகளைச் சுற்றி அவரது போதனைகள் அமைந்தன.

அவரின் எண்ணங்களை அவரது மரணத்திற்குப் பிறகு அவரைப் பின்பற்றியவர்களும் வரலாற்று ஆசிரியர்களும் எழுதி வைத்துள்ளனர். சீனா, ஜப்பான், கொரியா, பல வெளிநாட்டுச் சீன சமூகங்கள் ஆகியவற்றில் கன்ஃபியூஷியனிசம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## கன்ஃபியூஷியனிசத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

சீனாவில் கன்ஃபியூஷியனிசம் வலுவான இடத்தைப் பிடித்திருந்தாலும் சில காலகட்டங்களில் அது இறக்கத்தைச் சந்தித்தது. கிமு 221-ல் சீனாவை ஒருங்கிணைத்த முதல் மன்னர், கன்ஃபியூஷிய நூல்களை எரித்ததாகவும், தனது சீர்திருத்தத்தை எதிர்த்த கல்விமான்களைக் கொடுமைப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. ஆனால், அதற்குப் பின் வந்த ஹான் சாம்ராஜ்யம் கன்ஃபியூஷியனிசத்தை தேசத் தத்துவமாக ஏற்றுக்கொண்டது.

பாரம்பரிய மூட நம்பிக்கைகளை ஒதுக்கித் தள்ளி, அறிவுசார்ந்த இயக்கமாகக் கருதப்பட்ட நியோ-கன்ஃபியூஷியனிசத்துக்கு ஆதரவான கொள்கை சோங், மிங் சாம்ராஜ்யங்களில் பிரபலமானது. 1900 வாக்கில் பாரம்பரிய சீன சமூகத்தை நவீனமயமாக்கும் நோக்கில் மேற்கத்தியத் தத்துவங்களையும் தன்னுள் இணைத்துக் கொண்டது புதிய வகை கன்ஃபியூஷியனிசம்.

# கல்விமானின் கலைக்கூடம்

மிங் அல்லது சிங் சாம்ராஜ்யத்தயைச் சேர்ந்த உன்னத கல்விமான் படிக்க, தியானம் செய்ய, கையெழுத்துக்கலை பயில, ஓவியம் வரைய, சிறிய பொக்கிஷங்களை அனுபவிக்க, மற்ற கல்விமான்களுடன் கலந்துறவாட தனக்கென ஒரு கலைக்கூடத்தை அமைத்துக் கொள்வார். எழுதுவதற்கு முக்கியமான கருவிகளான தூரிகை, மை, தாள், மைதாங்கி ஆகியவை கலைக்கூடத்தின் நான்கு கல்விப் பொக்கிஷங்கள் என்று அழைக்கப்பட்டன.

மிங் காலத்தின் திறனாய்வு புத்தகங்களில் தங்கள் கலைக்கூடங்களில் உள்ள அறைகலன்கள், பொருள்கள் பற்றி கல்விமான்கள் விவரித்துள்ளனர். இந்த கல்விமானின் கலைக் கூடம் அமைவதற்கான எங்களுடைய கருத்தாக்கம், அந்த நூல்களில் உள்ள அடிப்படைகளிலிருந்து எடுக்கப்பட்டது ஒரு கல்விமானின் அழகியல் சார்ந்த குறிக்கோளின் வெளிப்பாடாக அந்தக் கலைக் கூடங்கள் அமைந்திருந்தன. கவனம் சிதையக் கூடாது என்பதால் பொதுவாக அவற்றில் குறைவான பொருள்களே இருக்கும்.

ஓய்வெடுக்கவும் தனிமை கொள்ளவும்கூட அந்தக் கலைக் கூடங்கள் பயன்பட்டன. இயற்கையிலிருந்து எழுச்சி பெற கலைக்கூடத்திலிருந்து தோட்டம் தெரிவது முக்கியமாகக் கருதப்பட்டது.

அதுபோன்ற கலைக் கூடங்களுக்கான அறைகலன்கள் அரிய மரங்களால் செய்யப்பட்டன. அதற்காக ஹுவாங்ஹுவாலி மரங்கள் தென்கிழக்காசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. மிங் காலத்தின் பிற்பகுதியில் வர்த்தகக் கட்டுபாடுகள் நீக்கப்பட்டவுடன் வெளிநாட்டிலிருந்து மரங்கள் கிடைக்கத் தொடங்கின.

பயணம் செய்த கல்விமான்கள்

பயணம்

கல்விமான்-அதிகாரிகள் நாடு முழுவதும் பல்வேறு அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டனர். இடம் பெயர்வது, அங்கு நிலைகொள்வது, பழைய நண்பர்களையும் இயற்கை இடங்களையும் பார்க்கச் செல்வது, கல்விகற்ற பல்வேறு குழுக்களைத் தெரிந்து கொள்வது போன்றவை கல்விமான்களின் வாழ்க்கை முறையானது. நில, நீர்ப் போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் அவர்களின் பயணத்தை எளிமையானதாகவும் வழக்கமானதாகவும் ஆக்கியது.

ஃபூஜியன் அறைகலன்

தெற்கு சீனாவின் ஜியாங்னான் பகுதியில் உருவாக்கப்பட்ட மிங் அறைகலன்களின் எளிய வடிவங்கள் பார்ப்பதற்கு அழகாக இருந்ததோடு நடைமுறைக்கு உகந்ததாகவும் இருந்தன. மேசைகளையும் நாற்காலிகளையும் எளிதாகக் கழற்றி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.

இதே பாணியில் ஃபூஜியன் அறைகலன்கள் செய்யப்பட்டன. ஆனால் அவை அந்த வட்டாரத்திற்கே உரிய “கோழி- இறக்கை” மரம் போன்ற கரு மரங்களால் செய்யப்பட்டன.

நான்கு கலாசாரத் தேடல்கள்

“சிதர் இசைக்கருவி, வெய்ச்சி விளையாட்டு, கையெழுத்துக்கலை, ஓவியம்” ஆகிய நான்கு கலாசாரத் தேடல்களில் உருவாக்கப்பட்ட சீன ஆண்களும் பெண்களும் ஈடுபடவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஒருவரின் நடத்தையை மேம்படுத்துவதே அந்த நடவடிக்கைகளின் நோக்கம்.

சிதர் எனப்படுவது தீய சக்திகளைப் புறந்தள்ளி, ஒருவருக்கு சிந்தைத் தெளிவையும் பக்தி வலிமையையும் தரக்கூடிய ஒரு தெய்வீக இசைக் கருவியாகக் கருதப்பட்டது. வெய்ச்சி விளையாட்டு (ஜப்பானில் கோ என்று அழைக்கப்படுகிறது) போர்த்திறன் சிந்தனைக்கும் பொறுமைக்கும் சிறந்த பயிற்சி வழங்குகிறது. உடல், மனத் திறன்களின் கலவை தேவைப்படும் கையெழுத்துக் கலை, ஒருவரின் உள் ஒழுக்கத்தைப் பிரதிபலிப்பதாகக் கருதப்பட்டது. இறுதியாக, பாரம்பரிய ஓவியங்களைக் கூர்ந்து கற்பது கலையின் நுணுக்கங்களை ரசிக்க கல்விமான்களுக்கு உதவியது.

## வணிகர்களும் கல்விமான்களும்

பெரும்பாலும் லாபத்தில் மட்டுமே குறியாக இருக்கும் சீன வணிகர்கள் கல்விமான்களுடன் தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்வதன்மூலம் அங்கீகாரம் பெற விரும்பினர். கல்விமான்களும் தங்கள் படைப்புகளுக்கு ஆதரவு தேடிக்கொள்ள செல்வந்தர்களின் நிதியாதரவை நாடினர். உயர் கல்வி பெற்ற கல்விமான்களைத் தங்களோடு வைத்துக்கொள்வது செல்வந்தர்களின் நாகரிகமானது. அவர்கள் பிரபலமான கையெழுத்துக்கலை நிபுணர்களின் வரிகளை மாட்டி வைத்தனர். கற்றோரின் கூட்டங்களைக் கூட்டினர். தங்கள் பிள்ளைகளுக்கு கன்ஃபியூஷியக் கதைகளைக் கற்றுக்கொடுக்க கல்விமான்களை நியமித்தனர். 16ஆம் நூற்றாண்டில் தெற்கு சீனா பொருளியல் வளர்ச்சியை அனுபவித்தது. அதனால் செல்வந்த வணிகர்கள் கல்விமான்களின் பணிகளுக்கு ஆதரவளித்தனர்.

## சிங்கப்பூரின் வணிகக்-கல்விமான்கள்

1900 வாக்கில் சிங்கப்பூரில் வெற்றி பெற்ற வணிகர்களின் ஆதரவுடன் கல்விமான்கள் தோன்றத் தொடங்கினர். சீனாவின் சீர்திருத்தவாதிகள், ஜனநாயகம், சமத்துவம் குறித்த ஐரோப்பிய, அமெரிக்க மிதவாத சிந்தனைகள் ஆகியவற்றால் உந்தப்பட்ட சிங்கப்பூர் வணிகர்கள், சீனப் பள்ளிகளையும் சீன செய்தித் தாட்களையும் ஆதரித்ததன் மூலம் சமூகத்துக்குக் கற்பிக்கும் கல்விமான்களாக உருமாறினர். அதனால் நிறைய சீனக் கல்விமான்கள் தென்கிழக்காசியாவுக்கு வந்தனர். கல்விமான்களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான தொடர்பு வலுப்பட்டது. 1930கள் வாக்கில் முக்கியமான வர்த்தகத் துறைமுகமாக சிங்கப்பூர் வளர்ச்சியடைந்தபோது சீனாவிலிருந்து வந்தக் குடியேறிகளில் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் ஆசிரியர்கள், செய்தியாளர்கள், லாவ் ஷெ, யு டாஃபு போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர்கள் போன்றோரும் அடங்கியிருந்தனர்.

## சிங்கப்பூரில் ஓவியங்களின் புரவலர்கள்

டாக்டர் டான் ட்சு சோர் (1911-1983) 1930களில் சீன ஓவியங்களைத் திரட்டத் தொடங்கினார். பெய்ச்சிங்கில் பணியாற்றிய ஷாங்ஹாய் ஓவியர்கள் ரென் யி, சி பாய்ஷி ஆகியோரின் படைப்புகளை அவர் விரும்பினார். டாக்டர் டானின் அழைப்பின்பேரில் சிங்கப்பூருக்கு வந்த கலைஞர்கள் சு பெய்ஹோங், சாவ் ஷாவ்ஆங் ஆகியோரிடமும், சிங்கப்பூர் ஓவியர் லியு காங்கிடமும் நட்பு கொண்டார் அவர். சிங்கப்பூரில் நன்யாங் பாணி மை ஓவியம் வளர்ச்சியடைய டாக்டர் டானின் ஆதரவு இன்றியமையாததாக இருந்தது.

டாக்டர் டானின் சொந்தக் கையெழுத்துக் கலை முயற்சி வெவ்வேறு பாரம்பரிய பாணிகளையும் வெவ்வேறு வண்ண மைகளையும் பின்பற்றியது. அவரது திரட்டின் பெரும்பகுதி சியாங் சு ஷுவாங் என்ற பெயரில் ஆசிய நாகரிக அரும்பொருளகத்திற்கு வழங்கப்பட்டது.

கல்விமானை விவரிப்பது

உருவாக்கப்பட்ட கல்விமான்கள் சீனக் கலாசாரத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஒரு முன்மாதிரியாக விளங்கினர். கன்ஃபியூஷியஸ் அவர்களைப் “பிழையற்ற ஆடவர்கள்” என்று அழைத்தார். 10ஆம் நூற்றாண்டில் கல்விமான்கள் பெரும்பாலும் சோங் ஓவியங்கள் மூலமும் அதன் தொடர்பான இலக்கியம் மூலமும் உருவாக்கப்பட்டனர். மிங் சாம்ராஜ்யத்தின் பிற்பகுதியில் கல்விமான்கள் பெரும்பாலும் இலக்கியத்தில் கவனம் செலுத்தினர். அதனால் "லிடரெரி" என்று அவர்கள் கருதப்பட்டனர்.

## அரச வெளிவேஷங்கள்

சாம்ராஜ்யத்தை நிலைப்படுத்துவதற்காக ஆட்சி செய்ய சொர்க்கத்தின் கட்டளையைப் பெற்ற, பிழையற்ற ஆடவர்களாகவும் கல்விமான்களாகவும் தங்களைக் காட்டிக்கொள்ள சீன அரசர்கள் விரும்பினர். அரசர்களும் அவர்களது கல்விமான்-அதிகாரிகளும் திறமையான கலைஞர்களாக இருந்தனர். அரசாங்க அதிகாரிகளைத் தயார்செய்ய சீன அரசர்கள் தங்கள் சொந்தக் கையெழுத்துக் கலை வடிப்புகளையோ அரசப் பட்டறையில் தயாரிக்கப்பட்ட கல்வி சார்ந்த பொருள்களையோ வழங்குவர்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அரசவையில் கலை சார்ந்த சாதனைகளின் தரத்தை உயர்த்தின. பிறரின் விசுவாசத்தைப் பெற சிறப்புத் தாள்கள், மை எழுதுகோல்கள், மென்மையான பொருள்கள் ஆகியவை வாங்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஓர் அரசனுக்கு இளம் வயதிலேயே ஒரு கல்விமான் ஆசிரியராக நியமிக்கப்படுவார். சில அரசர்கள் கல்விமான் சார்ந்த வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பர். "வாசிப்பது சிந்தையை வளப்படுத்தும்" என்ற புகழ்பெற்ற பொன்மொழிக்குச் சொந்தக்காரர் சோங் அரசர் டாய்சோங் (939-997). அவர் நிறைய வாசித்து தமது அமைச்சர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

## கல்விமானாக காங்சி அரசர்

காங்சி அரசர் (1662 முதல் 1722 வரை ஆட்சி புரிந்தவர்) தனது வெளிநாட்டு மன்ச்சு சாம்ராஜ்யத்துக்காக ஹான் சீன கல்விமான்-அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெற்றார். கன்ஃபியூஷியனிசத்திலும் பாரம்பரிய சீனக் கலாசாரத்திலும் அவர் காட்டிய தீவிர ஆர்வமே அந்த அங்கீகாரத்துக்குக் காரணம். கையெழுத்துக் கலையையும் ஓவியம் வரைவதையும் மேற்கொண்ட அவர் காங்சி சொற்களஞ்சியம், முழு டாங் கவிதைகள் ஆகியவற்றைத் தொகுக்க ஆதரவளித்தார்.

அரச அந்தஸ்து விற்பனைக்கு

19ஆம் நூற்றாண்டில் தெற்கு சீனர்கள் தென்கிழக்காசியா, அமெரிக்கா, ஹவாயி ஆகியவற்றில் குடியேறினர். அங்கு பெரும் செல்வம் சேர்த்தாலும் அவர்கள் தங்கள் தாய் நாட்டிலிருந்து அந்தஸ்துக்குரிய சின்னங்களை விரும்பினர். 1877ல் சிங்கப்பூரில் நிறுவப்பட்ட தூதரகத்தின் மூலம் சின்னங்களுடன் கூடிய பட்டங்களை விற்றது சீன அரசாங்கம். அந்தப் பட்டங்களின் விலைகள் செய்தித்தாட்களில் விளம்பரம் செய்யப்பட்டன.

பட்டங்களை வாங்கியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பெரும்பாலான வெளிநாட்டுச் சீனர்கள் மேண்டரின் அங்கிகளை அணிந்தனர். திருமணங்கள், காலனித்துவ விழாக்கள் போன்ற முக்கியமான நிகழ்வுகளுக்கு சின்னங்களுடன் கூடிய அதிகாரத்துவ அங்கிகள் அணியப்பட்டன.

கல்விமான்-அதிகாரிகள்

தேர்வு முறை

7ஆம் நூறறாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை, கன்ஃபியூஷிய நூல்களை அடிப்படையாகக் கொண்ட தேர்வுகளில் சிறப்பாகச் செய்து தேர்ந்தெடுக்கப்பட்டோர் சீன அரசாங்கத்தை வழிநடத்தினர்.

திறமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள் மன்னருக்கு விசுவாசத்துடன் நடந்து கொண்டனர். இந்தக் கல்விமான்-அதிகாரிகள் சில சமயங்களில் மேண்டரின்ஸ் என்று அழைக்கப்பட்டனர். அந்தத் தேர்வு முறை வியட்நாமிலும் கொரியாவிலும் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கத்திலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியது.

கல்விமான்-அதிகாரிகளின் பதவியும் அதிகார நிலையும் அவர்களது மதிநுட்பமான ஆடைகளின் மூலம் காட்டப்பட்டது. அத்தகைய ஆடைகள் முதலில் டாங் சாம்ராஜ்யத்தில் உருவாக்கப்பட்டன. மிங், சிங் சாம்ராஜ்யங்களில் விலங்குச் சின்னங்கள், துணி, துணைப் பொருள்கள் போன்றவற்றுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தன.

நீக்குப்போக்கற்றது என்று குறைகூறப்பட்ட தேர்வு முறை, அரசியல் கொந்தளிப்பு சமயங்களில் தடைபட்டது. சோங் அரசாங்கம் வீழ்ந்த போது 1279 முதல் 1315 வரை தேர்வு முறையை நிறுத்தி வைத்தது யுவான் சாம்ராஜ்யம். 19ஆம் நூற்றாண்டில் அந்தத் தேர்வு முறை புத்தாக்கத்தையும் நவீனமயத்தையும் குலைப்பதாகக் கருதப்பட்டது. 1905ல் அது முற்றாக நீக்கப்பட்டது.

கனவுகளும் அதீதக் கற்பனைகளும்
ஒரு கல்விமானின் உருவம்

பெரும்பாலோர் கல்விமான்கள் மீது மரியாதை செலுத்தினாலும் தங்கள் சொந்த சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள அவர்களால் நேரத்தை ஒதுக்க முடியவில்லை. எனினும் அவர்கள் கல்விமான் வாழ்க்கையின் சில அம்சங்களை ஏற்றுக் கொண்டனர். மிங் சாம்ராஜ்யத்தில் கல்விமான்களின் உருவங்கள் மிகப் பிரபலமடைந்தன. பீங்கான், மெருகு ஆகியவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களும் அவற்றின் வர்த்தகமும் அந்தப் பிரபலத்துக்கு உதவின. கல்விமான்கள் எழுதுவது, ஓவியம் வரைவது, மதுரசம் அருந்துவது, இசை வாசிப்பது போன்றவை அந்தப் பொருள்களில் காட்சியளித்தன. அந்தப் பொருள்களை உயர்மட்டத்தில் இருந்தவர்கள் மட்டுமல்ல, எழுதப்படிக்கத் தெரியாதவர்களும் சேகரித்தனர்.

சீனக் கல்விமான்களின் உருவங்களை வெளிநாட்டினர் வியப்புடன் பார்த்தனர். 17ஆம் நூற்றாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் பெரும்பாலும் நாவல்களிலிருந்தும் ஓவியப் புத்தகங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்விமான் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சில சமயங்களில் ஐரோப்பிய வடிவமைப்பும் அதில் கலந்திருந்தது.

## பண்டைய சீனாவின் தொன்மையை மீண்டும் கண்டெடுப்பது

தொன்மைக்குப் புத்துயிர் கொடுப்பது சீனாவில் நீண்டகாலமாக இருக்கும் கலைப் பாரம்பரியமாகும். வெண்கலத்திலும் பதிவுகள் பொறிக்கப்பட்ட கற்களிலும் பொறிக்கப்பட்டவற்றை ஆராய்வது கல்விமான்களுக்குரிய முக்கிய நடவடிக்கையாக மிங், சிங் காலக்கட்டங்களில் கருதப்பட்டது. அவ்வப்போது ஷாங், ஷோவ் சாம்ராஜ்யங்களின் சடங்குபூர்வ வெண்கலங்கள் தோண்டியெடுக்கப்பட்டன. அந்த வெண்கலங்களில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் சீன வரலாற்றின் புதிய மூலங்களாக கல்விமான்களால் கவனமாக ஆராயப்பட்டன.

பண்டைய கலங்களின் வடிவங்களும் வடிவமைப்புகளும் பிற்காலங்களில், குறிப்பாக மிங், சிங் சாம்ராஜ்யங்களில் பின்பற்றப்பட்டன. பழமையான வெண்கலங்கள், பீங்கான், பச்சை மாணிக்கக் கல் போன்ற வித்தியாசமான பொருள்களில் மீண்டும் உருவாக்கப்பட்டன. அதில் பொறிக்கப்பட்டவை மீண்டும் கையெழுத்துக் கலை மூலம் எழுதப்பட்டன. சீன வரலாற்றுக்கான மரியாதையையும் பண்டைய கொள்கைகளின் கொண்டாட்டத்தையும் அது உணர்த்துகிறது.

## பண்டைய சீனாவின் சடங்குகள்

சீனாவில் பண்டைய சடங்குகளில் பச்சை மாணிக்கக் கற்களும் வெண்கலப் பொருள்களும் பயன்படுத்தப்பட்டன. அந்தச் சடங்குகளின் அம்சங்கள் 5ஆம் நூற்றாண்டில் கன்ஃபியூஷியசின் எண்ணங்களுக்கு வித்திட்டன.

### பச்சை மாணிக்கக் கல்

சீனாவில் கிமு 5000ஆம் ஆண்டு முதலே பச்சை மாணிக்கக் கற்கள் அவற்றின் அழகுக்கும் கெட்டியான தன்மைக்கும் பெரிதும் விரும்பப்பட்டன. அதிக நுணுக்கம் நிறைந்த பச்சை மாணிக்கக்கல் பொருள்கள் பண்டைய மேற்குடிக் கல்லறைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சில பொருள்கள் கருவிகள் போலவும் ஆயுதங்கள் போலவும் வடிவமைக்கப்பட்டிருந்தாலும் அவை எளிதில் உடையக்கூடியவை என்பதால் அவற்றை வேறு எதற்காகவும் பயன்படுத்த முடியாது. அவை பெரும்பாலும் விழாக்களில் சின்னங்களாகப் பயன்பட்டிருக்கும். பிற்காலத்தில்கூட பச்சை மாணிக்கக் கற்களின் ஒளிக்கதிர் ஊடுருவும் நிலை அறச்செயல், அறிவு ஆகியவற்றோடு தொடர்பு படுத்தப்பட்டது.

### வெண்கலம்

ஷாங் சாம்ராஜ்யத்திலும் (சுமார் கிமு 1600-1046) சோவ் சாம்ராஜ்யத்திலும் (சுமார் கிமு 1046-256) மூதாதையர்களைக் கௌரவிக்கும் விழாக்களிலும் ஆண்டுதோறும் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளிலும் பயன்படுத்துவதற்காக வெண்கலத்தால் செய்யப்பட்ட மிகப்பெரிய கலங்கள் பயன்படுத்தப்பட்டன. வெவ்வேறு வடிவங்களில் வந்த கலங்கள் உணவு, தானியம், மதுரசம் ஆகியவற்றுக்காகப் பயன்பட்டன. அந்தச் சடங்குகளின் முக்கியத்துவம், எந்த வகையான விலங்குகள் காவு கொடுக்கப்பட வேண்டும், என்ன வகையான உணவுகள் பரிமாறப்பட வேண்டும் போன்றவை பின்னாளில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. இந்த விழாக்கள் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதாக கன்ஃபியூஷியஸ் பாராட்டினார்.

### ஆவி விலங்குகளும் உருவங்களும்

ஹான் சாம்ராஜ்யத்தில் (206 கிமு - கிபி 220), சில விலங்குகள், உருவங்கள், இதிகாச மிருகங்கள் போன்றவற்றுக்கு சிறப்பு சக்திகள் இருந்ததாக நம்பப்பட்டது. மரணமின்மை, நீண்ட ஆயுள் ஆகியவற்றைத் தேடி நிஜ உலகத்தையும் ஆவி உலகத்தையும் இணைத்தன வில ங்குகள்.